


வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ நவம்பர். 18, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 44 ❖ ரூ.10

### அமைச்சர் விரைவில் அனைத்து அறுவை சிகிச்சை நிபுணர்களுடன்

# ஆலோசனை!

## மாணவி பிரியா குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம், அரசு வேலை வீட்டிற்கான ஆணை: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வழங்கல்



சென்னை, நவ.18-

தமிழகத்தில் உள்ள அனைத்து அறுவை சிகிச்சை நிபுணர்களுடன் விரைவில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். இந்நிலையில், தவறான அறுவை சிகிச்சையால் உரிழந்த மாணவி பிரியா குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம், அரசு வேலை, வீட்டிற்கான ஆணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

சென்னைகொளத்தூர் மருத்துவமனையில் தவறான சிகிச்சை காரணமாக கால் அகற்றப்பட்டு, ராஜீவ்காந்தி அரசுப் பொதுமருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த கால்பந்தாட்ட வீராங்கனை பிரியா நவம்பர் 15ம் தேதியன்று உயிரிழந்தார்.

தவறான சிகிச்சையளித்த இரண்டு மருத்துவர்கள் மற்றும் ஒரு செவிலியர் பணியிடமாற்றம் செய்யப்பட்டு துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. காவல்துறை சார்பிலும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், வியாசர்பாடியில் உள்ள மாணவி பிரியாவின் இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (நவ.17) நேரில் சென்று வீட்டில் வைக்கப்பட்டிருந்த பிரியாவின் உருவப்படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

உயிரிழந்த பிரியாவின் சகோதரருக்கு அரசு வேலைக்கான நியமன ஆணையும், ரூ.10 லட்சம் நிவாரணத்தொகைக்கான காசோலையையும், மேலும் அந்த குடும்பத்தினருக்கு வீட்டிற்கான ஆணையையும் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். இந்த சந்திப்பின்போது, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சி முடிந்த பின் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் பட்டப்படிப்பிற்கான தரவரிசை பட்டியலை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டு அவர் பேசியதாவது:

சுகாதாரத் துறையினர் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக விடியல் பெற்றுள்ளனர். விருப்பத்திற்கேற்ப வெளிப்படைத் தன்மையுடன் பணி மாறுதல் கலந்தாய்வு நடைபெற்றது. சுகாதாரத்துறையில் 136-வது அறிவிப்பு அறிவிக்கப்பட்டது. இதன் செயல்பாடுகள் புத்தகமாக வெளியிடப்படும்.

136-வது அறிவிப்பாக தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் மருந்துகளை குறைந்த செலவில் சோதனை செய்து தரும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இதற்காக ரூ.3 கோடி செலவில் உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சிக் கூடம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இங்கு மருந்துகளின் தரம் உறுதி செய்வதற்கான பரிசோதனை நடைபெற உள்ளது. இதற்காக தனியார் நிறுவனங்களுக்கு குறைந்த செலவில் சோதனை செய்ய திட்டம் துவக்கப்படுகிறது.

மாணவி பிரியாவின் உயிரிழப்பு என்பது ஏற்க முடியாத ஒன்று. தமிழகத்தில் உள்ள அறுவை சிகிச்சை நிபுணர்களைவரவழைத்து விரைவில் ஆலோசனை நடத்தி தணிக்கை குழு அமைக்கப்படும். இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் திருவள்ளூர், சேலம், தூத்துக்குடி, கள்ளக்குறிச்சி, நாமக்கல், மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 24.71 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலக வளாகம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன், தலைமை செயலாளர் இறையன்பு, துறையின் முதன்மை அமுதா மற்றும் ஊராட்சி துறை ஆணையர் தரேஸ் அஹமது உள்ளிட்டோர் உள்ளனர்.

## காசி–தமிழ் சங்கமம் கலாச்சார, ஆன்மிகத்தை போற்றும் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பெருமிதம்!



சென்னை, நவ.18-

காசி - தமிழ் சங்கமம் நிகழ்ச்சி கலாச்சாரத்தையும், ஆன்மிகத்தையும் போற்றும் வகையில் நடைபெறுகிறது என்று மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பெருமிதம் தெரிவித்தார்.

உத்திரப்பிரதேசம் மாநிலம் காசியில் நடைபெறும் காசி - தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்க தமிழகத்திலிருந்து புறப்படும் முதல் குழுவின் ரயிலை, சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி மற்றும் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் ஆகியோர் கொடியசைத்து நேற்று தொடங்கி வைத்தனர்.

இதைத்தொடர்ந்து மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தமிழகத்தின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் விதமாக கலாச்சார நிகழ்ச்சிகள் அங்கு நடக்க உள்ளது. பண்பாடு, இலக்கியங்கள், திருக்குறள் ஆகியவை பற்றி கலை நிகழ்ச்சிகள் தினம்தோறும் நடைபெற உள்ளது.

தமிழக கலாச்சாரத்தை மேம்படுத்தும் விதமாக 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற நிகழ்ச்சியின் மூலமாக தமிழகத்தில் இருந்து 270க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்க உள்ளனர். நாளை 19ம் தேதி வாரணாசியில் பிரதமர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இந்நிகழ்ச்சியில் எந்த ஓர் அரசியல் விமர்சனமும் கிடையாது. இது முழுமையாகதமிழகத்தின் கலாச்சாரத்தையும், ஆன்மிகத்தையும், பண்பாட்டையும் போற்றும் விதமாக நடைபெறுகிறது.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்து காசிக்கும், நமக்கும் தொடர்பு உள்ளது. உன்னதமான தமிழ் கலாச்சாரத்தை போற்றும் விதமாக இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. இவ்வாறு எல்.முருகன் தெரிவித்தார்.

### இந்தியாவிற்குள் தான் தமிழ்நாடு இருக்கிறது

## தமிழகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிமிடம் வரை பிரதமர் ஆறுதல் கூட தெரிவிக்கவில்லை: அமைச்சர் மெய்யநாதன் விமர்சனம்



மயிலாடுதுறை, நவ.18-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைக்கும் பணிகளை ஆய்வு செய்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சரும் தமிழக சுற்றுசூழல் மற்றும் விளையாட்டு துறை அமைச்சருமான மெய்யநாதன் செய்தியாளர்களை சந்தித்தார்

அப்போது சீர்காழியில் பெய்தகனமழைகாரணமாக எல்லா பகுதிகளிலும் நீர் சூழ்ந்த பகுதியாக ஒட்டுமொத்தமாக மின் இணைப்பு பாதிக்கப்பட்டது.

தமிழக முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுத்து மின்துறை அமைச்சரை நேரடியாக களத்திற்கு அனுப்பி வெளி மாவட்டங்களில் இருந்து மின்துறை சார்ந்த அதிகாரிகள் ஊழியர்கள் வரவழைக்கப்பட்டு பணிகள் நடைபெற்றது.

அதனால் 2,06,527 மின்னிணைப்புகள் துண்டிக்கப்பட்ட நிலையிலும் 36 மணி நேரத்தில் அனைத்து பகுதிகளுக்கும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை எல்லாம் நேரில் ஆய்வு செய்த முதல்வர் சென்னை திரும்புவதற்கு முன்னதாக ரூபாய் 1000 நிவாரணம் அறிவித்துள்ளார். சீர்காழி, தரங்கம்பாடி தாலுகாவில் உள்ள அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் ரூபாய் ஆயிரம் வழங்கபடும். தற்போது வரை 21 இடங்களில் நிவாரண முகாம்களில் 5824 குடும்பங்களை சேர்ந்த 14,620 பேருக்கு மூன்று வேளையும் உணவு வழங்கபடுகிறது.

122 ஆண்டுகளுக்கு பிறகு இந்த பகுதியிலே மிக கனமழை பெய்திருக்கிறது. தமிழக முதலமைச்சர் இங்கே அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பியதுடன் முதலமைச்சர் நேரடியாக கள ஆய்வு செய்து இந்த திட்டங்களை அறிவித்திருக்கிறார்.

இந்தியாவுக்குள் தான் தமிழ்நாடு இருக்கிறது, இந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நிமிடம் வரை பிரதமர் ஆறுதல் கூட தெரிவிக்கவில்லை அதே சூழலில் இந்த பாதிப்பு மற்ற வட மாநிலங்களில் ஏற்பட்டு இருந்தால் பிரதமர் உடனடியாக பார்வையிட்டு அதற்கான சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்திருப்பார். அப்படி எந்த சிறப்பு நிதியும் ஒதுக்கீடும் இதுவரை செய்யாத நிலையில் அண்ணாமலை உண்மைக்கு புறமாக பேசி வருகிறார் என்று தெரிவித்தார்.

இதில் மாவட்ட ஆட்சியர் லலிதா மாவட்ட செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம் பன்னீர்செல்வம் சீர்காழி ஒன்றிய குழு தலைவர் கமலா ஜோதி தேவேந்திரன் சீர்காழி கோட்டாட்சியர் அர்ச்சனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

## அனுமதியின்றி யாரும் சிலைகள் வைக்கக்கூடாது மதுரை ஐகோர்ட் நீதிபதிகள் அதிரடி உத்தரவு



மதுரை, நவ.18-

தமிழகத்தில் முறையான அனுமதியின்றி யாரும் சிலைகளை வைக்கக்கூடாது. அதற்கு அனுமதிக்கவும் கூடாது என மதுரை ஐகோர்ட் நீதிபதிகள் அதிரடியாக உத்தரவிட்டுள்ளனர்.

விருதுநகரை சேர்ந்த பாலசுப்பிரமணியன் மதுரை ஐகோர்ட் கிளையில் மேல்முறையீட்டுவழக்கை தாக்கல் செய்திருந்தார். அவர் மனுவில், அம்மச்சியாபுரம் பகுதியில் தியாகி இமானுவேல்சேகரனின் வெண்கல சிலையை வைக்க அனுமதி கோரிய வழக்கை விசாரித்த தனி நீதிபதி முறையான அனுமதி இன்றி வைக்கப்பட்ட சிலையை அகற்றுமாறு உத்தரவிட்டுள்ளார். சிலை வைக்கப்பட்ட பின் நடைபெற்ற அமைதி கூட்டத்தில் அனுமதி பெறும் வரை சிலையை தகரம் அமைத்து மூடிவைக்க முடிவு எடுக்கப்பட்டது. அது முறையாக பின்பற்றப்பட்டுள்ளது. இந்த சூழலில் சிலையை அகற்றுமாறு உத்தரவிட்டது ஏற்கத்தக்கதல்ல. ஆகவே இது தொடர்பான தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இவ்வழக்கு நீதிபதிகள் மகாதேவன், சத்திய நாராயணபிரசாத் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், "பட்டா இடத்திலேயே சிலை வைக்கப்பட்டுள்ளது. தற்போது டின் கொண்டு மூடி வைக்கப்பட்டுள்ள நிலையில், சிலையை அகற்றுமாறு உத்தரவிட்டது ஏற்கத்தக்கதல்ல" என வாதிடப்பட்டது.

அரசுத்தரப்பில், "அந்த பகுதியில் ஏராளமான சாதிய மோதல்கள் நிகழ்ந்துள்ளன. அதோடு அனுமதி பெறாமல் சிலை வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, தனிநீதிபதியின் உத்தரவை ரத்து செய்யக்கூடாது," என வாதிடப்பட்டது.

அதைத்தொடர்ந்து நீதிபதிகள், "அதிகாரிகள் மனுதாரரின் மனுவை நிலுவையில் வைத்திருப்பது ஏன்? இதனால் காவல்துறையினரே சிரமத்திற்கு ஆளாகின்றனர். முன்னாள் முதல்வரின் சிலையை வைக்கவே நீதிமன்றம் அனுமதி வழங்கவில்லை. அதிகாரிகளிடம் அனுமதி பெற அறிவுறுத்தப்பட்டது. ஆகவே, அனுமதி பெறும் வரை சிலையை திறக்கக்கூடாது. அதற்கு பொறுப்பேற்று மனுதாரர் தரப்பில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை வருகிற 24ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

மேலும், தமிழகத்தில் முறையான அனுமதியின்றி யாரும் சிலைகளை வைக்கக்கூடாது. அதற்கு அனுமதிக்கவும் கூடாது என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

**தோல்வியில் இருந்து எதையும் கற்றுக்கொள்ளவில்லை என்றால் அது தான் உண்மையான தோல்வி**






| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,950 | Rs.5,352 |

# ராகுல் காந்தி மீது போலீஸில் புகார்? வீர் சாவர்கர் பேரன் ரஞ்சித் சாவர்கர் பகீர்!

மும்பை, நவ.18–

காங்கிரஸ் எம்.பி., ராகுல் காந்தி, தொடர்ந்து திட்டமிட்டே சுதந்திர போராட்ட வீரர் வீர் சாவர்கரை அவமதிப்பதால் அவர் மீது மும்பை சிவாஜி பார்க் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்போவதாக வி.டி. சாவர்கரின் பேரன் ரஞ்சித் சாவர்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த 2017ம் ஆண்டு முதல் ராகுல் காந்தி தொடர்ந்து எனது தாத்தாவை அவமதித்து வருகிறார். வீர் சாவர்கர் ஒரு சுதந்திர போராட்ட வீரர். ஆனால், வாக்கு வங்கி அரசியல் செய்யும்



காங்கிரஸ், சாவர்கரை அவமதித்து வருகிறது.

சமீபத்தில், பழங்குடியின தலைவர் பிர்ஸா முண்டாவின் பிறந்த நாளை ஒட்டி ஜன் ஜாதிய கவுரவ் திவஸ் நிகழ்ச்சியில் ராகுல் காந்தி பங்கேற்றார். ஹிங்கோலியில் நடந்த விழாவில் பேசிய ராகுல் காந்தி, "அந்தமான் சிறையில் இருந்து, சாவர்கர் ஒரு கடிதம் எழுதினார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு அவர் எழுதிய மன்னிப்புக் கடிதம் அது. அந்தக் கடிதத்தில் அவர் தன்னை விடுவிக்குமாறு மன்றாடியிருந்தார். பின்னர் வீர் சாவர்கர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் பென்ஷன் பெற்றார். சிறையில் இருந்து வந்தபின்னர் அவர் பிரிட்டிஷ் படைகளில் சேர்ந்தார் என்று ராகுல் காந்தி பேசியுள்ளார்.

ராகுல் காந்தி பேச்சு தொடர்ந்து வீர் சாவர்க்கரை அவமதித்து வருவதாக உள்ளது. ஆகவே, மும்பை போலீஸில் ராகுல் மீது புகார் அளிக்க உள்ளேன். இவ்வாறு வி.டி.சாவர்கரின் பேரன் ரஞ்சித் சாவர்கர் தெரிவித்துள்ளார்.

# நவ.22ல் திருநங்கைகளுக்கு குறைதீர் கூட்டம்: தென்காசி ஆட்சியர் தகவல்

தென்காசி, நவ.18–

தென்காசியில் திருநங்கைகளுக்கான குறை தீர்க்கும் கூட்டம் வரும் 22ம் தேதி நடக்கிறது என்று மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் வரும்.,22 ம் தேதி தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து திருநங்கைகளுக்கான குறை தீர்க்கும் கூட்டம் மற்றும் லோன் மேளா நடைபெற உள்ளது. இந்த குறைதீர் நாள் முகாமில்



உறுப்பினர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வங்கி கணக்கு புத்தகம் போன்ற அசல் ஆவணங்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

மேற்கண்ட அசல் ஆவணங்கள் இல்லையெனில் அவற்றை வழங்குவதற்கும் வங்கிக்கடன், உதவி சுய வேலைவாய்ப்பு முகாம், 40 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஓய்வூதிய திட்டம், மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை வழங்குதல், இலவச வீட்டு மனை பட்டா உள்ளவர்களுக்கு வீடு கட்டுவதற்கான திட்டம் மற்றும் திருநங்கைகள் நல வாரியம் திறன் மேம்பாட்டு கழகம் மூலம் திருநங்கைகள் விருப்பத்திற்கு ஏற்ப திறன் பயிற்சியும் வழங்கப்படும். எனவே குறைதீர்க்கும் நாள் முகாமில் திருநங்கைகள் கலந்துகொண்டு பயன் பெறவேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




# 'விக்ரம்–எஸ்' தனியார் ராக்கெட் இன்று விண்ணில் ஏவப்படும்

## ஸ்கைரூட் நிறுவனம் அறிவிப்பு



ஐதராபாத், நவ.18–

இந்தியாவின் முதலாவது தனியார் ராக்கெட் 'விக்ரம்-எஸ்', இம்மாதம் 12ம் தேதியில் இருந்து 19ம் தேதிக்குள் விண்ணில் செலுத்தப்படும் என்று ஏற்கனவே அறிவிப்பு வெளியானது.

விண்வெளித்துறையில் தனியார்துறைபங்கேற்பை எளிதாக்க 2020ல் அனுமதி வழங்கப்பட்டது. இதை தொடர்ந்து ஐதராபாத்தை சேர்ந்த ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் என்ற தனியார் விண்வெளி ஸ்டார்ட்அப் நிறுவனம், இந்த ராக்கெட்டை தயாரித்துள்ளது. இந்திய விண்வெளித் திட்ட நிறுவனர் 'விக்ரம் சாராபாய்'க்கு மரியாதை செலுத்தும் வகையில் 'விக்ரம்-எஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

வானிலையைப் பொறுத்து, ராக்கெட் ஏவப்படும் சரியான தேதியை அதிகாரிகள் தீர்மானிப்பார்கள் என்று ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் அறிவித்திருந்தது. அதன்படி, ராக்கெட் ஏவுதலை இம்மாதம் 18ம் தேதிக்கு தள்ளி வைத்தது ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம். இம்மாதம் 15ம் தேதியில் இருந்து 19ம் தேதிக்குள் விண்ணில் செலுத்தப்படுவதற்கான கால அவகாசம் உள்ளது.

இந்நிலையில், இன்று (நவ.18ம் தேதி) காலை 11.30 மணியளவில் ராக்கெட் விண்ணில்செலுத்தப்படும் என்று ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் பிரியா பெயரில் கால்பந்து போட்டி: அண்ணாமலை

சென்னை, நவ.18–

மழைக்காலம் முடிந்தவுடன் பிரியாவின் பெயரில் சென்னை அளவில் ஒரு மிகப்பெரிய கால்பந்தாட்ட போட்டியை நடத்தப் போகிறோம் என்று பா.ஜ., மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

தவறான சிகிச்சையால் கால் அகற்றப்பட்டு ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த மாணவி பிரியா உயிரிழந்தார். இதையொட்டி வியாசர்பாடி பகுதியில் உள்ள பிரியாவின் வீட்டிற்கு சென்று பா.ஜ., மாநில தலைவர் அண்ணாமலை, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் பிரியாவின் உருவப்படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தி



ஆறுதல் தெரிவித்தனர்.

இதன்பின்னர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: சகோதரி பிரியாவின் இழப்பு யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் இழப்பு. இன்னும் 5 நாட்களில் பிரியாவின் பெயர் தமிழகத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக, மழைக்காலம் முடிந்தவுடன் பிரியாவின் பெயரில், சென்னை அளவில் ஒரு மிகப்பெரிய கால்பந்தாட்ட போட்டியை நடத்தப்போகிறோம். கால்பந்தாட்ட வீரர்களான பிரியாவின் சகோதரர்கள் பரிந்துரைக்கும் 10 கால்பந்தாட்ட வீராங்கனைகளுக்கு உதவித்தொகை வழங்கி அவர்கள் விரும்பும் கால்பந்தாட்ட அகாடமியில் சேர்க்கப்படுவர். அதற்கான முழு செலவையும் பா.ஜ., ஏற்றுக்கொள்ளும் என்றார்.

மற்றொரு நிகழ்ச்சியில், அமைப்பு ரீதியாக கட்சியை இன்னும் கட்சியை பலப்படுத்த வேண்டும் என பிரதமரும், அமித்ஷாவும் அறிவுறுத்தியுள்ளனர். இதனால் அடுத்த ஓராண்டுக்கு கட்சியை ஒன்றிய அளவில் பலப்படுத்தும் பணியை நிர்வாகிகள் செய்ய வேண்டும். இவ்வாறு அண்ணாமலை தெரிவித்தார்.

# மதுரை ஐயப்பன் கோவிலில் ஐயப்ப பக்தர்கள் குவிந்தனர்

மதுரை, நவ.18–

ஒவ்வொரு ஆண்டும் மகர விளக்கு பூஜையின் போது பல லட்சக்கணக்கான பக்தர்கள் ஐயப்பனை தரிசிக்க மாலை அணிந்து விரதம் இருந்து ஐயப்பன் கோவிலுக்குச் செல்வது வழக்கம். நேற்று கார்த்திகை மாத பிறப்பை முன்னிட்டு ஐயப்பன் கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிப்பதற்காக ஏராளமான பக்தர்கள் மாலை அணிவித்து விரதம் இருக்க துவங்கினர்.

நேற்று காலை மதுரை மேலமாசி வீதியில் உள்ள ஐயப்பன் கோவிலில்



சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமான பக்தர்கள் மாலை அணிந்து கொள்ள குவிந்தனர். ஆராய்நிறுவன முதுநிலை மேலாளர் சண்முகசுந்தரம் தனது மகனுக்கு மாலை அணிவிப்பதற்காக கோவிலுக்கு வந்தார். அவருடன் அவரது குடும்பத்தினரும் வந்திருந்தனர்.

ஏற்பாடுகளை கோவில் தலைவர்கள் தளபதி மாரியப்பன், நீதிமோகன், பொருளாளர் ராகவன், செயலாளர் ராமச்சந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.

# சபரிமலைக்கு பெண்கள் செல்ல அனுமதி சுப்ரீம் கோர்ட் உத்தரவு அமலுக்கு வந்தது

திருவனந்தபுரம், நவ.18–

சபரிமலை ஐயப்பன் கோவிலில் இதுவரை இல்லாத வகையில் 10 முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்களை அனுமதிக்கும்படி கடந்த 2018ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்றன.

உச்ச நீதிமன்ற உத்தரவிற்குப் பின்னர் கோவில் நடை திறக்கப்பட்டபோது, 10 வயது முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்கள் பலர், சபரிமலைக்கு செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால், பக்தர்களின் கடும் எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக அவர்களால் செல்ல முடியவில்லை.

பின்னர், உத்தரவுக்கு எதிர்ப்பு மற்றும்



கொரோனா பரவல் காரணமாக இதுவரை அமல்படுத்தப்படாமல் இருந்த உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு தற்போது அமலுக்கு வந்துள்ளது. இந்நிலையில், சபரிமலையில் பெண்களை அனுமதிக்க வேண்டும் என தற்போது போலீசாருக்கு கேரள அரசு அறிவுறுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

சபரிமலைக்கு பெண்கள் செல்லலாம் என உச்சநீதிமன்றம் அனுமதி அளித்ததில் இருந்து, தேவஸ்தானம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இதற்கு மேலும் பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் கேரள மாநில பா.ஜ.க., தலைவர் சுரேந்திரன் அவரது பேஸ்புக்பக்கத்தில் அதிரடி கருத்தை பதிவிட்டுள்ளார். அதில், கேரள அரசு இதுபோன்ற முடிவுகள் எடுத்தால் கடந்தகாலத்தில் ஏற்பட்டது போல் பெரும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என பதிவிட்டிருந்தார்.

# தரிசு நிலங்களை, விளை நிலமாக மாற்ற வேண்டும் வேளாண் அதிகாரி விவசாயிகளுக்கு அறிவுரை

அரிமளம், நவ.18–

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் வட்டாரத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கு



விவசாயிகள் செய்ய வேண்டியது குறித்து அரிமளம் வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தரிசாக இருக்கும் நிலங்களில் உள்ள முட்புதர்களை அகற்றுவது, நிலத்தை சமன்படுத்துவது, உழவு செய்வது, சாகுபடி செய்ய தேவையான உளுந்து மற்றும் சிறுதானிய விதைகள், உயிர் உரங்கள், மற்றும் நுண்ணூட்ட உரங்கள் வாங்குவதற்கு தேவையான மொத்த செலவினங்களில் 50 சதவீதம் மானியமாக ஒரு ஹெக்டருக்கு ரூ.13 ஆயிரத்து 500, பின்னேற்பு மானியமாக வழங்கப்படவுள்ளது.

ஆகையால், விவசாயிகள் தங்களிடமுள்ள தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றி பயனடைய தேவையான ஆவணங்களான கணினி சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல், வங்கி கணக்கு புத்தகத்தின் நகல், பயனாளியின் இரண்டு புகைப்படங்கள் ஆகிய ஆவணங்களுடன் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரிடம் சர்மப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அரிமளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**கனம் வருவாய் கோட்டாச்சியர் அவர்கள், புதுக்கோட்டை**

**ந.க.அ6/5136/2022 நாள்:24.9.2020**

மா.ஐயப்பன்
த/பெ மாரிமுத்து சேவியர் குடிக்காடு
ஆத்தங்கரைபட்டி(PO)கந்தர்வக்கோட்டை (TK), புதுக்கோட்டை (DT)

-மனுதாரர்

எதிராக
வட்டாச்சியர்,
வட்டாச்சியர் அலுவலகம்,
கந்தர்வக்கோட்டை

-எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் ஐயப்பன் அவர்களின் (தாத்தாவுமாகிய தகப்பனார்) கைலாசம் மகனுமாகிய நடேசன் கடந்த 29.6.2020 வருடம் மேலே கண்ட முகவரியில் இறந்துவிட்டார், அவரது இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிட கோரி மனுதாக்கள் செய்யப்பட்டுள்ளது, மனுதாரரின் தாத்தா இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் மேற்படி புதுக்கோட்டை வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்து கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மா.ஐயப்பன்**
**த/பெ மாரிமுத்து சேவியர் குடிகாடு**
**ஆத்தங்கரைபட்டி கந்தர்வகோட்டை**
**தாலுக்கா புதுக்கோட்டை மாவட்டம்**
**8489051268**

# கறம்பக்குடி அருகே மக்கள் மறியல் போராட்டம்



கறம்பக்குடி, நவ.18–

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே சுக்கிரன்விடுதி கிராமத்தில் சேதமடைந்த நிலையில் நிழற்குடை உள்ளது. அந்த நிழற்குடையை அப்புறப்படுத்தி விட்டு புதியநிழற்குடை கட்டித்தர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கைவிடுத்து வந்தனர். இந்நிலையில் சேதமடைந்த நிழற்குடை சில மாதங்களுக்கு முன் அகற்றப்பட்டுள்ளது.

சேதமடைந்த நிழற்குடை இடிக்கப்பட்ட இடத்தில் நீண்ட நாட்கள் ஆகியும் பயணிகள் நிழற்குடை அமைக்கவில்லை. இதனால், பள்ளி மாணவர்கள், மக்கள் பேருந்தில் பயணிக்ககூடிய பயணிகள் பேருந்துக்காக வெயிலில் காத்து நிற்க வேண்டிய அவலநிலை உள்ளது.

புதிய நிழற்குடை கட்டித் தராததை கண்டித்து அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் சுக்கிரன்விடுதி பேருந்து நிறுத்தத்தில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கறம்பக்குடி திருவோணம் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற காவல்துறையினர் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாக கூறியதை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர்.

# இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்கள் முழுமையாக பாடம் கற்றுக்கொடுக்க அறிவுரை

**புதுக்கோட்டை, நவ.18–**

இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்கள் தங்களிடம் பயிலும் மாணவர்களுக்கு மொழி மற்றும் கணித பாடங்களின் அடிப்படை கற்றல் திறன்களை முழுமையாக கற்றுக்கொடுக்க வேண்டும் என மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மணிவண்ணன் பேசினார்.

புதுக்கோட்டை ஒன்றியம் கட்டியாவயல் குடியிருப்பு உட்பட்ட பாரதிநகர் இல்லம் தேடி கல்வி மையத்தில் தன்னார்வலர்களுக்கு, மாணவர்களுக்கு பாராட்டு விழா, கையேடு வழங்கும் விழா, கலைவிழா என முப்பெரும் விழா நடைபெற்றது.

விழாவில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மணிவண்ணன் பேசியதாவது: இல்லம்



தேடி கல்வியை குழந்தை மைய கற்றலாய் சிறப்பாக எடுத்துச்செல்லும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். கொரோனா விளைவாக தொடக்கநிலை மாணவர்கள் வெவ்வேறு கற்றல் நிலைகளில் உள்ளனர். இக்கற்றல் இடைவெளியைப்போக்க தன்னார்வலர்களுக்கு கையேடு வழங்கப்பட்டுள்ளது. இக்கையேட்டினை பயன்படுத்தி இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்கள் தங்களிடம் பயிலும் மாணவர்களுக்கு மொழி மற்றும் கணிதப் பாடங்களின் அடிப்படை கற்றல் திறன்களை முழுமையாக கற்றுக் கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில், இல்லம் தேடிகல்விதிட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி, அடப்பகார சத்திரம் பள்ளி தலைமை ஆசிரியை சிவமலர் ஆகியோர் பங்கேற்றனர்.

# அசிக்காடு ஊராட்சியில் விவசாயிகளுக்கு திறன் மேம்பாடு பயிற்சி முகாம்

குத்தாலம், நவ- 18;



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் அசிக்காடு ஊராட்சியில் உள்ள வீரசோழன் உழவர் உற்பத்தியாளர் நிறுவன விதை சுத்திகரிப்பு நிலையத்தில், ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு சமூக ஒருங்கிணைப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி நேற்று வீரசோழன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைவர் சுகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர்கள் இளமதி, ஆனந்தி, நாகேஸ்வரி, மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வைத்தனர். ஆராய்ச்சி நிலைய முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் வேல்முருகன், இளநிலை ஆராய்ச்சியாளர்கள் சீத்தாராமன் தொழில்நுட்ப உதவியாளர் ராமமாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு சம்பா பயிர்களை பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினர்.

இதில் மயிலாடுதுறை, குத்தாலம், செம்பனார் கோயில் வட்ட்டங்களில் இருந்து 100 - க்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த பயிற்சி வகுப்பில் கலந்துக்கொண்டனர். தொடர்ந்து ட்ரோன் மூலம் மருந்துதெளிப்பதைபார்த்த விவசாயிகள் எளிமையான முறையாக இருக்கின்றது என்றும் இதை எளிதாக விவசாயிகள் பயன்படுத்தலாம் என தெரிவித்தனர். நிகழ்ச்சியின் முடிவில் வீரசோழன் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இயக்குனர் ஜானகிராமன் நன்றி கூறினார்.

# காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறுவதால் தமிழக கடலோர பகுதிகளில் கனமழை

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

சென்னை, நவ.18–

வங்கக்கடலில் வடக்கு அந்தமான் கடல் பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்தம் மேலும் வலுப்பெறும் என்றும் அது இரண்டு நாட்களில் மேலும் வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி, தமிழக கடலோரப் பகுதியில் அதிக மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் மீண்டும் தீவிரம் அடையத் தொடங்கியுள்ளது. இதையொட்டி, தற்போது வங்கக் கடலில் வடக்கு அந்தமான் பகுதியில் ஒரு காற்றழுத்தம் உருவாகியுள்ளது. இது மேலும் வலுப்பெறும் வாய்ப்புள்ளதால் தமிழகத்தில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கும் சூழல் உருவாகியுள்ளது.

இதற்கிடையே, கேரள பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் ஆங்காங்கே லேசானது முதல் மிதமான மழைபெய்து வருகிறது. 19ம் தேதி வரை இதே நிலை நீடிக்கும். அடுத்த இரண்டு நாட்களில் வங்கக் கடலில் உள்ள காற்றழுத்தம் வலுப்பெற்று தமிழக கடலோர பகுதிக்கு நெருங்கி வரும். அத்துடன் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெறும் வாய்ப்பும் உள்ளது. அதனால், தமிழகத்தில் 20ம்தேதி முதல் திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யும்.

மேலும், நேற்று முதல் 19ம் தேதி வரை தமிழகம் மற்றும் அதை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகள், தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகள், அதை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 55 கிமீ முதல் 65 கிமீ வேகத்தில் வீசும். அதனால் மேற்கண்ட பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# ஈரோடு சத்தியமங்கலம் நரிக்குறவர் சமுதாய மக்களுக்கு தொழில் திறன் பயிற்சி

## ஆட்சியர் கிருஷ்ணனுண்ணி நடவடிக்கை

ஈரோடு, நவ.18–



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச். கிருஷ்ணனுண்ணி அறிவுரையின் படி, விளிப்பு நிலையில் உள்ள மக்களின் வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், அரசுத்துறை சார்ந்த திட்டங்கள் அனைத்தும் விளிம்பு நிலை குடும்பங்களுக்கு சென்றடையும் பொருட்டு, சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சத்தியமங்கலம் குமாரபாளையம் ஊராட்சியில் எம். ஜி.ஆர்.நகரில் வசிக்கும் நரிக்குறவர் சமுதாயத்தை சார்ந்த 70 குடும்பங்களுக்கு தொழில்திறன் பயிற்சி வழங்கப்பட்டது. அவர்களுடைய சமுதாயம் சார்ந்த தொழிலான ஆபரண வகைகளான ஊசிமணி, மாலைகள் தயாரிப்பு தொழிலையே மதிப்பு கூட்டிய பொருட்களாக சேர்த்து செயற்கை ஆபரணம் தயாரித்தல் பயிற்சி வழங்கப்பட்டது.

இவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படும் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. வங்கிகள் மூலமாக கடன் பெற்றுத் தரவும், பெண்களை ஒருங்கிணைத்து மகளிர் சுய உதவி குழுக்கள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற விளிம்பு நிலையில் உள்ள மக்கள் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் ஈரோடு மாவட்ட ஆட்சிதலைவருக்கும் நன்றியை தெரிவித்தார்கள்.

# திருவொற்றியூரில் பழமையான நூலகம் புதிதாக கட்ட ரூ.1 கோடி தொகுதி நிதி வழங்கினார் எம்.எல்.ஏ. கே.பி.சங்கர்

சென்னை, நவ.18–



திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எண்ணூர் கத்திவாக்கம் பகுதியில் கத்திவாக்கம் கிளை நூலகம் 1962 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தது, பழைமை வாய்ந்த இந்த நூலகம் மிகவும் சேதமடைந்து விட்டதால் பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் தான் கட்ட வேண்டும் என்று பள்ளி கல்வித்துறை அமைச்சர் கூறி இருந்தார்.

50,000 க்கும் மேற்பட்ட ஏழை மக்கள் வாழும் பகுதியில் நூலகம் அமைந்துள்ளதால் 2021 - 22 ஆம் ஆண்டின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் ஒரு கோடி ஒதுக்கி அதற்கான ஒப்புதல் கடிதத்தை இன்று சென்னை மாநகர ஆணையர் ககன்தீப் சிங் பேடி இடம் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் வழங்கினார். திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல பள்ளி கட்டிடங்கள் மிகவும் சேதம் அடைந்து உள்ளதாகவும் அதனை சீர்படுத்தி தர வேண்டும் என்றும் கோரிக்கை வைத்திருந்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட சென்னை மாநகராட்சி ஆணையர் பொதுப்பணித்துறை வசம் உள்ள பள்ளிகளை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்த உடன் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு திருவொற்றியூரில் உள்ள பள்ளிகள் சீரமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



▶ திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் தாலுகா, விண்ணமங்கலம் மின்சார துறை சார்பில் பொதுமக்களுக்கு மின் பாதுகாப்பு விழிப்புணர்வு உதவி செயற் பொறியாளர் எஸ். அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. உதவி மின் பொறியாளர் கரும்பூர் பி.அன்பரசன், முகவர் ராமநாதன் ரவி சிவராமன் வெங்கடேசன் விமல் சேகர் ஞானசேகரன் பரணிதரன் ஹரிஷ் மற்றும் மின்வாரிய ஊழியர்கள் இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில் விழிப்புணர்வு துண்டு பிரசுரத்தை பொதுமக்களுக்கு வழங்கினார்கள்



▶ புதுச்சேரி அரியாங்குப்பத்தில் உள்ள பாரதியார் பல்கலைக் கூடத்தில் நடைபெற்ற இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்பு துவக்க விழாவில் போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா கலந்து கொண்டு தலைமை தாங்கினார். மேலும் இவ்விழாவில் மாணவர்கள் வரைந்த ஓவியங்களை பாராட்டி பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் பாரதியார் பல்கலைக் கழகம் முதல்வர், ஆசிரியர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



▶ ஈரோடு கலைமகள் பள்ளி மற்றும் ஈரோடு சைல்ட் லைன் 1098 திட்ட ஒருங்கிணைப்பாளர் லாரன்ஸ் தலைமையில் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற தமிழக காவல்துறை விளையாட்டு வீராங்கனைகள் மற்றும் கலைமகள் பள்ளி விளையாட்டு வீராங்கனைகள் ஆகியோருக்கு நடைபெற்ற போட்டிகளை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சசிமோகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகள் ஈரோடு துணை மேயர் செல்வராஜ், ADSP கனகேஸ்வரி, சமூக நல பாதுகாப்பு ஆணை அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர், குழந்தைகள் நல குழும தலைவர், அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் நிர்மலாதேவி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




▶ வேலூர் மாவட்டம், காட்பாடியில் கூட்டுறவுத் துறை சார்பில் 69வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா 2022, தனியார் மண்டபத்தில் மாவட்ட ஆட்சியர் பெ.குமரவேல் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் திமுக பொதுச் செயலாளரும் மற்றும் தமிழக நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர், மக்கள் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதையடுத்து சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது.

# குடும்ப அட்டைகளுக்கு கூடுதல் நிவாரணம் வழங்க அரசுக்கு ஓ.எஸ்.மணியன் வலியுறுத்தல்



சீர்காழி, நவ.18–

கனமழையின் காரணமாக மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி, கொள்ளிடம் சுற்றுவட்டாரம் முழுவதும் விளைநிலங்கள் மற்றும் வீடுகள் தண்ணீர் சூழ்ந்து பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது

சீர்காழி அருகே பெருந்தோட்டம், மணிகிராமம் பகுதியை பார்வையிட்ட வந்த அதிமுக முன்னாள் அமைச்சர் ஓ எஸ் மணியன் செய்தியாளிடம் கூறியதாவது;

அதிமுக ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட வெள்ளம், புயல் பாதிப்பின் போது நிவாரணத்தொகை கூடுதலாக வழங்கினோம் ஆனால் தற்பொழுது வரலாறு காண அளவில் மழை பெய்து பாதிப்பை ஏற்படுத்தி தாழ்வான பகுதியில் குடியிருப்பு வீடுகள் தண்ணீர் சூழ்ந்து மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி புயல் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு சரியாக வழங்கப்படுவதில்லை என குற்றம்சாட்டினார். பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ஆயிரம் ரூபாய் நிவாரணம் என்பது போதாது கூடுதலாக நிவாரணம் வழங்க வேண்டும் வலியுறுத்தினார்.

பின்னர் செய்தியாளர்கள் தற்போது மழையால் தொகுப்பு வீடுகள் பெரும் பாதிப்படைந்துள்ளதாகவும், அதிமுக பத்தாண்டு ஆட்சிகாலத்தில் சீரமைத்து தரவில்லையே ஏன் என கேட்ட கேள்விக்கு? கூரை வீடுகள் மட்டுமே பாதிப்படைந்துள்ளது தொகுப்பு வீடுகள் பாதிப்பு அடையவில்லை என சவால் விட்டுபேசினார், செய்தியாளர்கள் பாதிக்கபட்ட தொகுப்பு வீடுகளை காண்பிக்கிறோம் வாருங்கள் என தெரிவித்ததும், பின்னர் ஓ.எஸ்.மணியன் திடிர் பல்டி அடித்து ஆமாம் ஆமாம் பத்து வீடு பாதித்துள்ளது என கூறி மழுப்பி சென்றார்.



▶ அம்பத்தூரில் புதிய நீதிமன்ற கட்டிடம் ரூ 13 கோடி மதிப்பில் அம்பத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி. ராஜா கட்டிடத்தை திறந்து வைத்து பேசினார். இவ்விழாவில் தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி மற்றும் இந்து அறநிலை துறை அமைச்சர் பி. கே. சேகர் பாபு பால்வளத்துறை அமைச்சர் சா.மு.நாசர் உயர் நீதிமன்ற நீதிபதி பிரீத்தி ஆஷா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் ஆகிய பங்கேற்றனர். பாண்டிச்சேரி பார் கவுன்சில் தலைவர் அமுல்ராஜ், வழக்கறிஞர் மாங்காடு ராஜா , வழக்கறிஞர் கிருஷ்ணன் வரவேற்று பேசினார் அம்பத்தூர் பார் கவுன்சில் தலைவர் முரளி பாபு தலைமை உரை நிகழ்த்தினார். காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அம்பத்தூர் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் டி .கே முருகேசன் நன்றி கூறினார்.

# நத்தப்பேட்டையில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்

காஞ்சிபுரம், நவ.18–



காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட 27-வது வார்டு, நத்தப்பேட்டையில் காஞ்சிபுரம் மாவட்ட தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமை காஞ்சிபுரம் மாநகராட்சி 27-வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஷாலினிவேலு துவக்கி வைத்தார்.

முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், செயற்கை கருவூட்டல், குடற்புழு நீக்கம், சினை பரிசோதனை, மலடு நீங்க சிகிச்சை உள்ளிட்டவை நடைபெற்றன. சிறப்பு கால்நடை மருத்துவர்கள் பங்கேற்று கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

இம்முகாமில் காஞ்சிபுரம் மாவட்ட கால்நடை மருத்துவர் ஏ.கந்தசாமி, ஆய்வாளர் எஸ்.சரவணபெருமாள், நத்தப்பேட்டை ஆதிதிராவிடர் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பி.சாந்தி மற்றும் பலர் பங்கேற்றனர்.

# பெரியபாளையத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட எல்லாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் திறப்பு விழா

ஊத்துக்கோட்டை, நவ18–



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம் பெரியபாளையத்தில் ரூ.2.84 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட எல்லாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் புதிய கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று திறந்து வைத்தார்.

இந்நிலையில், இந்த அலுவலகத்தில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் குத்து விளக்கேற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செ.ஆ.ரிஷப், சார் ஆட்சியர் (பொன்னேரி) ஐஸ்வர்யா ராமநாதன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் ராஜவேல், எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், ஸ்டாலின், ஒன்றிய பெருந்தலைவர் வடமதுரை கே.ரமேஷ், துணைப் பெருந்தலைவர் வக்கீல் சுரேஷ், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜே. மூர்த்தி, எல்லாபுரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆ.சத்தியவேலு மற்றும் எல்லாபுரம் ஒன்றிய குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மழையால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு பகுதிகளை எம்.எல்.ஏ., நிவேதா முருகன் பார்வையிட்டார்

தரங்கம்பாடி, நவ.18–



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் திருக்கடையூர் சுற்றியுள்ள கிராமங்களில் கனமழையால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு பகுதிகளில் எம்எல்ஏ நிவேதா எம். முருகன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

செம்பனார்கோயில் ஒன்றியத்தில் திருக்கடையூர், பிள்ளை பெருமாள்நல்லூர், மாணிக்கபங்கு உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு பகுதியில் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் வீடு வீடாகசென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் அவர் பொது மக்களிடம் வீடுகளை இழந்த அனைவருக்கும் அரசு சார்பில் வீடு கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும், மின் இணைப்பு இல்லாதவர்களுக்கு விரைந்து வழங்கிட நடவடிக்கைஎடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

அதைத் தொடர்ந்து திருக்கடையூர், பிள்ளை பெருமாள்நல்லூர், மாணிக்கபங்கு உள்ளிட்ட ஊராட்சிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடியிருப்பு பகுதி மற்றும் விளைநிலங்களை பார்வையிட்டு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

அவருடன் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஒன்றிய ஆணையர் மஞ்சுளா, வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயலட்சுமி, திமுக ஒன்றிய செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன் ஏ.ஆர்.ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, ஒன்றிய குழு துணைத்தலைவர் மைனர் பாஸ்கர், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஜெயமாலதி சிவராஜ், தீபா முனுசாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் எழில்நம்பி, விஜயகுமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செந்தில் மற்றும் அரசு அதிகாரிகள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட திமுக கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# சண்முகநாதன் பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா




திருமயம், நவ.18–

திருமயம் அரசம்பட்டி சண்முகநாதன் பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது.

விழாவில், முதலாமாண்டு ஒருங்கிணைப்பாளர் வெண்ணிலா வரவேற்றார். கல்லூரி முதல்வர் முத்துராமு முன்னிலை வகித்தார். கல்லூரிச் செயலர் விஸ்வநாதன் வாழ்த்தி பேசினார். கல்லூரி தாளாளர் பிச்சப்பா மணிகண்டன் தலைமை வகித்து 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் கூடுதல் மதிப்பெண் பெற்று கல்லூரியில் சேர்ந்துள்ள மாணவ, மாணவியருக்கு சிறப்புக்கல்விக் கட்டண சலுகைக் கடிதங்களை வழங்கி பேசினார்.

தன்முனைப்பு பேச்சாளர் கண்ணதாசன் சிறப்பு விருந்தினராகக் பங்கேற்று பேசியதாவது: மாணவர்களின் நலனை தம் நலம்போல் பேணிக் காக்கும் ஆசிரியர்களின் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுங்கள். மாணவர்களின் வளர்ச்சி கண்டு மகிழ்பவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் பெற்ற ஞானத்தையும், அனுபவங்களையும் சேகரித்துக்கொள்ளுங்கள். நல்லதமிழில்பேசுங்கள். நம் தாய்மொழி வளர துணை நில்லுங்கள். அதேபோல் ஒழுக்கத்தையும், கல்வியையும் இரு கண்களாகக் கருதுங்கள். இவ்வாறு அவர்பேசினார்.

நிறைவாக மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறைத் தலைவர் வரதராஜன்நன்றிகூறினார். விழாவில் அனைத்து துறைத் தலைவர்கள், பேராசியர்கள், மாணவ, மாணவியர், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# விதிமீறி விற்பனை செய்த விதைக்கடலைக்கு தடை விதை ஆய்வு துணை இயக்குனர் உத்தரவு



ஆலங்குடி, நவ.18–

ஆலங்குடியில் விதை சட்ட விதிகளை மீறி விற்பனை நிலையங்களில் ரூ.159.68 லட்சம்மதிப்புள்ள 156.95 மெட்ரிக் டன் நிலக்கடலை விதைகளை விற்பனை செய்ய விதை ஆய்வு துணை இயக்குனர் அதிரடியாக தடை விதித்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு ரபி பருவத்தில் 7,400 ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடிசெய்யவிவசாயிகள், தற்போது பெய்துவரும் பருவமழையை பயன்படுத்தி, நிலத்தினை தயார்படுத்தும்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், விதை ஆய்வு துணை இயக்குனர் விநாயகமூர்த்தி தலைமையில், விதை ஆய்வாளர் பாலையன் உட்பட அதிகாரிகள் ஆலங்குடியில் உள்ள கடலை விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்தனர். அப்போது, விதைசட்டவிதிகளைமீறிய விற்பனை நிலையங்களில் ரூ.159 லட்சத்து 68 ஆயிரம் மதிப்புள்ள 156.95 மெட்ரிக் டன் நிலக்கடலை விதைகளை விற்பனை செய்ய தடை விதித்தனர்.

மேலும், விதை விற்பனை உரிமங்கள் பெற்ற தனியார் விதை விற்பனையாளர்கள் அனைவரும் விதை சட்ட விதிகளை பின்பற்றி தரமான நிலக்கடலை விதைகளை விற்பனை செய்யவேண்டும். மீறுவோர் மீது விதைச்சட்ட விதிகளின் படி கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு விதை ஆய்வு துணை இயக்குநர் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

# திருமயம் அருகே என்.எஸ்.எஸ்., முகாம்




திருமயம், நவ.18–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகேஉள்ளகுழிபிறைராம ராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி மாணவர்களைக்கொண்டு ஏழு நாள் என்.எஸ்.எஸ்., சிறப்பு முகாம், திட்ட அலுவலர் பழனியப்பன் மேற்பார்வையில் குழிவரைப்பட்டியில் நடைபெற்றது.

இதில் அம்மன் கோவில் வளாகம் பள்ளி செல்லும் வழியில் முள் செடிகள் அகற்றல், முக்கிய தெருக்களில் உள்ள குப்பைகள் அகற்றப்பட்டது. துவக்கப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளின் சாலை ஓரங்கள், விநாயகர் கோவில்வளாகம் ஆகியவை சுத்தம் செய்யப்பட்டது. நெகிழிப்பை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி, பள்ளி விளையாட்டு மைதானம் செப்பனிடப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டன.

பள்ளிசெயலாளர்ராம மீனாட்சி சொக்கலிங்கம் தலைமையேற்று மாணவர்களுக்கு முகாம் சான்றிதழ் வழங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் அழகப்பன் முன்னிலை வைத்தார். நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் கருப்பையா மற்றும் ஆசிரியர்கள் அழகு, சந்திரன், பாலகுமார், தேவேந்திரன், லட்சுமண ராஜார் காலை ராஜா ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆசிரியர் வெங்கடாசலம் நன்றி கூறினார்.

# அ.தி.மு.க., ஆட்சியில் கட்டப்பட்ட ரேஷன் கடை திறக்கப்படுமா?: 4 கிராம மக்கள் எதிர்பார்ப்பு



கந்தர்வகோட்டை, நவ.18–

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் 34 லட்சத்து 50 ஆயிரம்மதிப்பில் அ.தி.மு.க., ஆட்சியில் கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு வராத நியாய விலை கடைகளின் கட்டிடங்கள் திறக்கப்படுமா? என்பதே 4 கிராம மக்களின் ஏக்கமாக உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம்கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் மக்கள் பயன்பாட்டுக்காக கட்டி முடித்து 2 ஆண்டுகளாக பயன்பாட்டுக்கு வராத பொது விநியோக கட்டிடங்கள் காட்சிப் பொருளாகஉள்ளது. கடந்த அ.தி.மு.க., ஆட்சியில் புதுக்கோட்டைமாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்துக்கு உட்பட்ட மஞ்சபேட்டை, பந்துவாகோட்டை, கொத்தம்பட்டி,துருசுபட்டி ஆகிய ஊர்களில் பொது விநியோக கட்டிடங்கள் 4 கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை மக்கள் பயன்பாட்டிற்கு வராத கட்டிடங்கள் தற்பொழுது சிதிலமடைந்து வீணாகி வருகிறது.

உடனடியாக இது சம்பந்தமாகதமிழகஅரசும், மாவட்ட நிர்வாகமும் உடனடி நடவடிக்கை எடுத்து விரைவில் பயனற்றுக்கிடக்கும்நியாய விலை கட்டிடங்களை சம்பந்தப்பட்ட ஊர் மக்கள் பயன்பெறுமாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்களும், மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

தமிழகத்தில் தி.மு.க., ஆட்சியில் கட்டிடங்கள் கட்டப்பட்டால்அ.தி.மு.க., ஆட்சியில் திறக்காமல் இருப்பதும், அ.தி.மு.க., ஆட்சியில் கட்டினால் தி.மு.க., ஆட்சியில் திறக்காமல் இருப்பதும் தொடர்கதையாகஉள்ளது. மக்கள்வரிப்பணத்தில்தான் இதுபோன்ற கட்டிடங்கள் கட்டப்படுகிறது என்பதை அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் மறந்து போவது ஏன்? என்று தான் தெரியவில்லை.








▶ அறந்தாங்கி அருகே சிலட்டூர் பெரிய கண்மாயில் 2ம் கட்டமாக முன்னாள் மற்றும் இந்நாள் மாணவர்கள் இணைந்து 3,000 பனை விதைகள் நட்டனர். இதில் பள்ளி தலைமை ஆசிரியர் சுதாகர், முன்னாள் மாணவர்கள் ராஜா, பள்ளி புரவலர் தமிழ்மாறன், ஊராட்சி தலைவர் ராணி ராஜா, உதவித்தலைமை ஆசிரியர் இளங்கோவன், ஆசிரியர் மாணிக்கவாசகம், எஸ்.எம்.சி., தலைவர் சசிகுமார் பசுமைப்படைத்திட்ட ஒருங்கிணைப்பாளர் கார்த்திக்கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



▶ புதுக்கோட்டை மவுன்ட் சீயோன் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் குழந்தைகள் தின விழா முன்னிட்டு மாணவர்களிடம் உதவும் மனப்பாங்கினை வளர்க்கும் பொருட்டு உணவுத்திருவிழா நடந்தது. சிறப்பு விருந்தினராக நீபதி ஜெயந்தி பங்கேற்றார். பள்ளி தலைவர் ஜோனத்தன் வரவேற்றார். பள்ளி தலைவர் ஏஞ்சலின் ஜோனத்தன் உணவு திருவிழா ஆண்டறிக்கை வாசித்தார். நிறைவாக பள்ளி முதல்வர் குமரேஷ் நன்றி கூறினார்.

# லாட்டரி, மதுபானம் விற்பனை ஆலங்குடியில் இருவர் கைது

ஆலங்குடி, நவ.18–

ஆலங்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சிலர் தமிழக அரசால் தடை செய்யப்பட்டவெளிமாநில லாட்டரி சீட்டுகள் விற்பனை செய்வதாக மாவட்ட எஸ்.பி., தனிப்படைபோலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதைத் தொடர்ந்து, தனிப்படை போலீசார் ஆலங்குடி பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது, ஆலங்குடி சந்தைப்பேட்டை பகுதியில் லாட்டரி விற்பனை செய்த ஆலங்குடி பாரதிதாசன் சாலையைச் சேர்ந்த சிவனேசன் (41) என்பவரை கைது செய்த போலீசார் அவரிடமிருந்து, லாட்டரி சீட்டுகள், 500 ரூபாய் மற்றும் ஒரு செல்போனை பறிமுதல் செய்தனர்.

ஆலங்குடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிலர் சட்டவிரோதமாக மது பாட்டில் பதுக்கி விற்பனை செய்வதாக வந்த தகவலை அடுத்து தனிப்படை போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது, மது விற்பனையில் ஈடுபட்ட கும்மங்குளத்தை சேர்ந்த ஜஸ்டின்திரவியம் (35)என்பவரைதனிப்படை போலீசார் கைது செய்து, அவரிடமிருந்து 12 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

# புதுகையில் நாளை மின்சாரம் இருக்காது

புதுக்கோட்டை, நவ.18–

புதுகை நகரில் நாளை 19ம் தேதி மின்சார விநியோகம் இருக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து புதுக்கோட்டைமின்வாரிய உதவி செயற்பொறியாளர் (இயக்கலும், காத்தலும்) கண்ணன் வெியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

புதுக்கோட்டை நகரியம் துணை மின்நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் இங்கிருந்து மின் விநியோகம் செய்யப்படும், கீழராஜவீதி, நிஜாம் காலனி, மார்த்தாண்டபுரம், சத்தியமூர்த்தி நகர், அசோக்நகர், திருவப்பூர், திருக்கோகர்ணம், திலகர் திடல், செல்லப்பாநகர் அம்பாள்புரம், அடப்பன்வயல், காமராஜபுரம், போஸ்நகர், கணேஷ்நகர் ஆகிய இடங்களில் புதுகையில் நாளை 19ம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின்விநியோகம் இருக்காது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



▶ மதுரை நாராயணபுரம் பகுதியில் இந்தியன் பேங்க் காலனி, பாரதியார் தெரு, 5வது வார்டில், மதுரை மாநகராட்சி சார்பாக, பூமிக்கு அடியில் பதித்த, பாதாள சாக்கடை பைப் உடையாமல் இருக்க பாதுகாப்பு கான்கிரீட் மேலே போடப்பட்டு அதன் வேலைகள் விரைவாக நடைபெற்று வருகிறது. அப்போது கோபால்சாமி கன்ஸ்ட்ரக்ஷன் அரவிந்த், மதுரை மாநகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.

# குடுமியான்மலை வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு தேனீ வளர்ப்பு, திறன் மேம்பாடு, செய்முறை பயிற்சி



அன்னவாசல், நவ.18–

குடுமியான்மலை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கல்லூரி இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவிகளுக்கு தேனீ வளர்ப்பு குறித்த திறன் மேம்பாடு மற்றும் செய்முறை பயிற்சிக்காக திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே உள்ள ஜிபின் தேனீ பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாணவ, மாணவர்களுக்கு பண்ணை நிர்வாகியும், தேனீ வளர்ப்பு பயிற்சியாளருமான குணசேகரன் மற்றும் மாரியம்மாள் குணசேகரன் இருவரும் தேனீ வளர்ப்பு குறித்த தகவல்கள் மற்றும் களப்பயிற்சிகளை செய்முறை விளக்கத்துடன் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு வேளாண் கல்லூரி முதல்வர் நக்கீரன் தலைமை வகித்தார். கல்லூரி பயிர் பாதுகாப்புதுறை பேராசிரியர்கள் ஜெயராணி, சந்திரசேகரன் மற்றும் சீனிவாசன் ஆகியோர் தேனீ வளர்ப்பு குறித்த தகவல்களை வழங்கினர். பயிற்சியில் தேனீ வளர்ப்பிற்கு பண்ணைகள் அமைத்து அதன் மூலம் பயிர்களுக்கு மகரந்த சேர்க்கை அதிகரித்து அதிகமகசூல் பெறலாம் என்றும், தேனீ மற்றும் அதன் சார்பு பொருட்கள் மூலம் அதிகலாபம் ஈட்டவும் வழிவகுக்கும் என்பதை செயல் முறையில் விளக்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் நக்கீரன், மாணவ, மாணவிகளிடையே தொழில் முனைவராகும் எண்ணத்தை ஏற்படுத்தி அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக இப்பயணம் அமைந்ததாக தெரிவித்தார்.

# நாடாளுமன்ற தேர்தல் கலந்துரையாடல் தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க., ஏற்பாடு




சங்கரன்கோவில், நவ.18–

சங்கரன்கோவிலில் தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க., செயலாளரும், சங்கரன்கோவில் எம்.எல்.ஏ., ராஜா முன்னிலையில், அவைத்தலைவர் பத்மநாபன் தலைமையில் வரும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து நிர்வாகிகள் கலந்துரையாடினர்.

நிகழ்ச்சியில் மாரிச்சாமி, பராசக்தி, செயற்குழு உறுப்பினர் பரமகுரு, ஒன்றிய செயலாளர் கிரிஸ்டோபர், மதி மாரிமுத்து, பெரிய துரை, சேர்மத்துரை, ராமச்சந்திரன், புளியங்குடி நகர் மன்ற தலைவர் விஜயா சௌந்தர பாண்டியன், மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட துணைச் செயலாளர் புனிதா முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர் பிரகாஷ் வரவேற்றார். நல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் வெற்றி விஜயன், தலைமை செயற்குழு உறுப்பினர் சீனிவாசன் தீர்மான நகலை வெளியிட்டார்.

சங்கரன்கோவில்நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, பொதுக்குழு உறுப்பினர் வெள்ளத்துரை, மருத்துவரணி மாவட்ட அமைப்பாளர் செண்பக விநாயகம், ஒன்றிய செயலாளர் சங்கரபாண்டியன், புளியங்குடி நகர செயலாளர், நகர் மன்ற துணைத் தலைவர் அந்தோணிசாமி, அவைத்தலைவர் வேல்சாமி பாண்டியன், நகரத் துணைச் செயலாளர் காந்திமதி அம்மாள், தகவல் தொழில்நுட்ப அணி ராஜ்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

வாக்குச்சாவடி சிறப்பு முகாமில் முகவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று புதிய வாக்காளர் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மகளிர் அணி மாவட்ட செயலாளர் முத்து செல்வி நன்றி கூறினார்.

# கலைநிகழ்ச்சிகள் கலைத்திருவிழா புதுகையில் முன்னேற்பாடு கூட்டம்



புதுக்கோட்டை, நவ.18–

பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கிவரும் அரசு நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் அனைத்து மாணவ, மாணவிகளும் பங்கேற்கும் வகையிலான கலைநிகழ்ச்சிகள் கலைத்திருவிழா என்னும் பெயரில் பள்ளி அளவில் வருகிற 23ம் தேதி முதல் 28ம் தேதி வரை நடைபெற இருக்கிறது.

இதையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கு அரசு நடுநிலைப்பள்ளிகளில் போட்டியினை சிறப்பாக நடத்துவது சம்பந்தமான முன்னேற்பாடு கூட்டம் முதன்மைக்கல்வி அலுவலகம் அருகில் உள்ள தேர்வுக்கூட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மணிவண்ணன் பேசியதாவது: கலைத்திருவிழா போட்டியானது அரசு நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் 6ம்வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பிரிவு 1 ஆகவும், 9 மற்றும் 10ம் வகுப்புக்கு பிரிவு 2ஆகவும், 11மற்றும் 12ம் வகுப்புக்கு பிரிவு 3ஆகவும் அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் வகையில் வருகிற 23ம் தேதி முதல் 28ம் தேதி வரை நடத்தப்படவேண்டும். மாவட்ட அளவில் தேர்வானவர்கள் வருகிற ஜனவரி 3ம் தேதி முதல் 9ம் தேதிவரை மாநில அளவில் நடைபெறும்போட்டிகளில் பங்கேற்பார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# கல்லூரிகளுக்கு இடையேயான பெண்கள் கபடி மதர்தெரசா உடற்கல்வியியல் கல்லூரி சாதனை



இலுப்பூர், நவ.18–

பல்கலை கல்லூரிகளுக்கு இடையேயான பெண்கள் கபடி போட்டியில் இலுப்பூர் மேட்டுசாலை மதர்தெரசா கல்லூரி முதல் பரிசை பெற்று சாதனை படைத்தது.

திருச்சந்தூர் பா.சிவந்தி ஆதித்தனார் உடற்கல்வியியல் கல்லூரி உள் விளையாட்டு அரங்கில் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான பெண்கள் கபடி போட்டி இரண்டு நாட்கள் நடந்தது. இதில், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் அங்கம் வகிக்கும் 10 அணிகள் பங்குபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் மேட்டுச்சாலை மதர்தெரசா உடற்கல்வியியல் கல்லூரி அணியும், தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழக அணியும் விளையாடியது. போட்டியில் வெற்றிபெற்ற இலுப்பூர் மேட்டுசாலை மதர்தெரசா உடற்கல்வியியல் கல்லூரி அணியினர் முதலிடம் பெற்று பரிசுக்கோப்பையை தட்டிச் சென்றனர்.

இதில், சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழக பேராசிரியர் வேல்குமார் கலந்துகொண்டு கோப்பை மற்றும் சான்றிதழ் வழங்கினார். விழாவில், மணிகண்டன், சிவந்தி ஆதித்தனார் கல்லூரி முதல்வர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

வெற்றி பெற்ற வீராங்கணைகள் மற்றும் கல்லூரி பேராசிரியர்களை மதர்தெரசா நிறுவனங்களின் தாளாளர் உதயகுமார், மதர்தெரசா நிறுவனங்களின் உடற்கல்வி இயக்குனர் மகேந்திரன் மற்றும் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

தொடர்ந்து இரண்டாவது முறையாக இலுப்பூர் மேட்டுசாலை மதர்தெரசா உடற்கல்வியியல் கல்லூரி பெண்கள் அணியினர் சாம்பியன் பட்டம் பெறுவது குறிப்பிடத்தக்கது.






Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# கார்த்திகை மாதம் புது வண்ணாரப்பேட்டை ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் 1000 க்கும் மேற்பட்ட ஐயப்ப பக்தர்கள் விரதத்தை தொடங்கினர்

சென்னை , நவ.18–

புது வண்ணாரப் பேட்டை டோல்கேட் பேருந்து நிலையம் அருகே உள்ள வடசென்னை ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் கார்த்திகை மாதம் முதல் நாளான இன்று கோவிலில் செண்டை மேளம் முழங்க ஐயப்பனுக்கு சிறப்பு அபிஷேகம் பூஜைகள் செய்யப்பட்டு ஐயப்ப பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வழிபட்டனர் .

வட சென்னைக்கு உட்பட்ட திருவொற்றியூர் புதுவண்ணாரப்பேட்டை இராயபுரம் எண்ணூர், உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஐயப்பா பக்தர்கள் ஐயப்பனை தரிசனம் செய்து சிறப்பு பூஜைகள் செய்த பிறகு குருசாமி ராமச்சந்திரனிடம் துளசி மாலை அணிவித்து தங்கள் விரதத்தை தொடங்கி உள்ளனர்

48 நாட்கள் விரதம் சபரிமலைக்கு சென்று ஐயப்பனை தரிசனம் செய்து மகரஜோதியை கண்ட பின்பு விரதத்தை முடிப்பது வழக்கம் கடந்த இரண்டு ஆண்டுகளை விட இந்த ஆண்டு அதிகமான ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதத்தை கடைப்பிடிப்பதாக தெரிகிறது

ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதம் முதல் நாள் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மாலை அணிந்து வழிபடுவது வழக்கம் இரண்டு ஆண்டுகளாக நோய் தொற்று தாக்கத்தினால் கார்த்திகை ஒன்றாம் தேதி அன்று 600 பேர் மட்டுமே மாலை அணிந்தனர் இதனை தொடர்ந்து இந்த ஆண்டு மாலை அணிந்து வழிபடுவது அதிகரித்துள்ளது

# கைதான ராமேசுவரம் மீனவர்கள் 15 பேர் இலங்கை சிறையிலிருந்து விடுதலை!



சென்னை, நவ.18–

கச்சத்தீவு அருகேகடல் பகுதியில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை எல்லைதாண்டி வந்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்வது தொடர் கதையாக நடந்து வருகிறது. அதை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக மீனவர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த 5ம் தேதி கச்சத்தீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்த ராமேசுவரம் மீனவர்கள் 15 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சிறுவன் உள்பட 15 பேரும் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுக்கான நீதிமன்ற காவல் நேற்று நவ.17ம் தேதி முடிவடைந்தது. இதையடுத்து ராமேசுவரம் மீனவர்கள் 15 பேரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி, 15 மீனவர்களையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். மேலும் விடுவிக்கப்பட்ட 15 பேரும் மீண்டும் எல்லைதாண்டி மீன்பிடிக்க வந்தால் சிறை தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரித்த நீதிபதி, படகின் உரிமையாளர் 6 மாதத்திற்குள் கோர்ட்டில் ஆஜராகுமாறு தெரிவித்தார்.

விடுதலை செய்யப்பட்ட ராமேசுவரம் மீனவர்கள் 15 பேரும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் ஒரு சில நாட்களில் நாடு திரும்புவார்கள் என்ற எதிர்பார்ப்பில் மீனவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



▶ ரெட் ஜெயன்ட் மூவிஸ் தயாரிப்பில், உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் இயக்குநர் மகிழ் திருமேனி இயக்கியுள்ள திரைப்படம் "கலகத் தலைவன்". இப்படம் உலகமெங்கும் நாளை (இன்று) வெளியாகிறது. இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் "கலகத் தலைவன்" திரைப்படத்தை படக்குழுவினருடன் இணைந்து, தனியார் திரையரங்கில் பார்த்தார். படத்தை பார்த்த பின் சமூக அக்கறையுடன் நேர்த்தியான படைப்பை உருவாக்கியிருப்பதற்காக "கலகத் தலைவன்" படத்தின் நாயகன் உதயநிதி ஸ்டாலின், இயக்குனர் மகிழ் திருமேனி மற்றும் படக்குழுவினருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# அன்னவாசல் அருகே 12 அடி மலைப்பம்பு தீயணைப்புதுறையினரிடம் ஒப்படைப்பு



அன்னவாசல், நவ.18–

அன்னவாசல் அருகே ஏதினிப்பட்டியில் கோழியை விழுங்கிக் கொண்டிருந்த 12 அடி நீள மலைப்பாம்பை பெயிண்டர் ஒருவர் தனி நபராகபிடித்துதீயணைப்பு துறையினரிடம் ஒப்படைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே உள்ள ஏதினிப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் விவசாயி மகேந்திரன். இவரது வீட்டில் உள்ள வைக்கோல் போர் அருகேமலைப்பாம்பு ஒன்று கோழியை விழுங்கி கொண்டிருந்தது. இதையடுத்து அதிர்ச்சி அடைந்த மனோகர் கூச்சலிட்டுள்ளார்.

இதனால் இவர் வீட்டிற்கு அருகிலுள்ள மருதப்பன் என்ற பெயிண்டர் அந்தப்பகுதிக்கு சென்று தனி நபராக 12 அடி நீளம் உள்ள மலைப்பாம்பை பிடித்துள்ளார். பின்னர் இதுகுறித்து அப்பகுதியினர் சிப்காட் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் அளித்தனர்.பின்னர்சம்பவ இடத்திற்குவந்ததீயணைப்பு துறையினரிடம் பிடிபட்ட 12 அடி நீளம் மலைப்பாம்பு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அந்த பாம்பு வனத்துறையினரால் நார்த்தாமலை காப்புக்காட்டில்பத்திரமாக விடப்பட்டது.

## சீர்காழியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு

# 5 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும் பாஜக தலைவர் அண்ணாமலை



சீர்காழி , நவ.18–

சீர்காழி தாலுக்கா பகுதியில்கடந்த 11ஆம்தேதி அதித கனமழை பெய்தது இதன் காரணமாக சீர்காழி கொள்ளிடம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகபட்ச மழை அளவு பதிவானது. சீர்காழியில் 44 சென்டிமீட்டர் கொள்ளிடத்தில் 32 சென்டிமீட்டர் மழை அளவு பதிவானது இதனால் சீர்காழி தாலுக்கா பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகள் மற்றும் விவசாய நிலங்கள் முற்றிலும் பாதிப்படைந்தது. இந்த பாதிப்புகள் குறித்து பார்வையிடவும் நிவாரணம் வழங்கவும் பாஜக தலைவர் அண்ணாமலை வருகை புரிந்தார் .

முதலில் கொள்ளிடம் ஒன்றியம் கொடிக்கால்வெளி கிராமத்தில் கனமழையால் 120 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. இருவதுக்கும் மேற்பட்ட வீடுகளில் தண்ணீர் உட்புகுந்து வீட்டின் சுற்றுச்சுவர்இடிந்துவிழுந்து பாதிப்படைந்துள்ளன.

பாதிப்படைந்த வீடுகளை பார்வையிட்ட அவர் பாதிப்புகள் குறித்து அப்பகுதி மக்களிடம் கேட்டறிந்தார் தொடர்ந்து நூறு பேருக்கு அரிசி, காய்கறி, போர்வை உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கி வருகினார் அதனைத் தொடர்ந்து ராதாநல்லூர் கிராமத்தில் பத்திரிகையாளர்கள் சந்தித்த பாஜக மாநில தலைவர் அண்ணாமலை

தமிழக அரசு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் நிவாரணம் என்பது எந்தவகையிலும் போதாது ஐயாயிரம் ரூபாயாக வழங்க வேண்டும். என கூறினார். அப்போது பாஜக மாவட்ட செயலாளர் அகோரம் மற்றும் பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.

புதிய வரலாறு நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய

செய்தியாளர்கள் தேவை

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை


தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகாக்கள் வாரியாக பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரார்கள் தேவை.

தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்.

தபால் அனுப்பவேண்டிய முகவரி :

TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534

# தர்மபுரி ஆ.பள்ளிப்பட்டியில் மழை காலம் முடியும் வரை குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்கள் மறுப்பு





தர்மபுரி , நவ.18–

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் அ .பள்ளிப்பட்டி கிராமத்தில் தற்போது பெய்த பருவ மழையின் காரணமாக அரசு நடுநிலைப் பள்ளியின் கட்டிடம் இடிந்து விழும் தருவாயில் உள்ளதால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப தயக்கம் காட்டி வருகின்றனர்.

இதனை அறிந்த தலைமையாசிரியர் ஊராட்சி மன்ற தலைவர், ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் குழந்தைகளின் பெற்றோர்கள் அனைவரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் பெற்றோர்கள் புது கட்டிடம் கட்டும் வரை எங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப மாட்டோம் என்று கூறிவிட்டனர். இதனிடையே ஒன்றிய கவுன்சிலர் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் பள்ளி கட்டிடத்தின்தன்மையைஎடுத்துக் கூறி உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார்.

பெற்றோர்கள் எங்கள் பிள்ளைகளின் உயிர் எங்களுக்கு முக்கியம் என்று கூறி மழை காலம் முடியும் வரை எங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப மாட்டோம் என்றனர். 60 ஆண்டுகளாக இயங்கி வரும் அரசு பள்ளியின் கட்டிடம் மிகவும் சேதம் அடைந்துள்ளது ஏறக்குறைய 100 குழந்தைகள் படிக்கும் இந்த பள்ளியில் கட்டிடத்தை சரி செய்து கொடுக்க உடனடியாக மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்ய வேண்டும் என்று அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய வரலாறு நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய

ஆட்கள் தேவை

காலிப் பணிஇடங்கள் 2

PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN

தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள்

சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்

தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரார்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்

மேலும் தொடர்புக்கு :

TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534

# உலக மாணவர்கள் தினம் கொண்டாடும் விதமாக காரைக்காலில் மரம் நடும் நிகழ்ச்சி



காரைக்கால் , நவ.18–

உலக மாணவர்கள் தினம் கொண்டாடும் விதமாக காரைக்காலில் உள்ள பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் மற்றும் ஆராய்ச்சி நிலையம் கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவ மாணவிகள் கிராமிய விவசாய மற்றும் வேளாண் தொழில் பணி அனுபவ பயிற்சியின் ஒரு அங்கமாக இரண்டு பள்ளிகளில் மரம் நடும் நிகழ்ச்சியை நடத்தினார்கள்.கல்லூரியின் இணை பேராசிரியர் டாக்டர் எஸ். ஆனந்த்குமாரின் வழிகாட்டுதலின்படி இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் 40 மாணவர்கள் இரண்டு குழுக்களாக பிரிந்து அரசு ஆரம்பபள்ளி (சிபிஎஸ்சி), வடமறைகாடு மற்றும் எம். ஏ. கே இன்டர்நேஷனல் பள்ளியில் 10 மரங்களை நட்டு அங்குள்ள குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். முன்னதாக கல்லூரி மாணவர்கள் பள்ளி அலுவலர்களை வரவேற்று இந்த உலக மாணவர்கள் தினம் கொண்டாடுவதற்கான காரணம் குறித்து பள்ளி குழந்தைகளுக்கு விளக்கினர். அடுத்ததாக மரம் நடுவதின் முக்கியத்துவம் மற்றும் மரங்களின் தேவை குறித்து பள்ளி மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.கல்லூரி மாணவர்களின் உதவியுடன் பள்ளி குழந்தைகள் மரங்களை நட்டு நீர் ஊற்றினார்கள். இதன் மூலம் பள்ளி குழந்தைகள் மரங்களை பாதுகாத்து வளர்ப்பதன் அவசியத்தை அறிந்தனர்.


இறுதியாக கல்லூரி மாணவர்கள் மரம் நடும் நிகழ்ச்சியை நடத்த ஊக்கமளித்த இணை பேராசிரியர் டாக்டர் எஸ். ஆனந்த்குமாருக்கு, நிகழ்ச்சி நடத்த அனுமதி கொடுத்து உதவி செய்த பள்ளி நிர்வாகத்திற்கும் நன்றியுரைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சி இனிதாக நடக்க அனைத்து கல்லூரி மாணவர்களும் குறைந்தபட்சம் 50 ரூபாய் சொந்த நிதியிலிருந்து வழங்கினர்.

பள்ளி குழந்தைகள் அனைவருக்கும் தின்பண்டங்கள் வழங்கப்பட்டது. இறுதியாக பள்ளி நிர்வாகம் இவ்வாறான நிகழ்ச்சியை நடத்தி பள்ளி குழந்தைகள் பயன்பெற செய்த அனைத்து கல்லூரி மாணவர்களையும் வாழ்த்தி நன்றி கூறினார்கள்.



# அறுவை சிகிச்சை நிபுணர்களுடன் ஆலோசனை: அமைச்சர்



# "பிரியா" கால்பந்து போட்டி அண்ணாமலை அறிவிப்பு



# முதல் தனியார் ராக்கெட் இன்று விண்ணில் பாய்கிறது


சென்னை / புதுக்கோட்டை | 18.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

திருமலை கிருஷ்ணமாச்சாரி , இந்திய யோகா ஆசிரியர் (பி.1888) (இ.1989)



பதுகேஷ்வர் தத் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1910) (இ.1965)



பி. எஸ். சரோஜா , தமிழகத் திரைப்பட நடிகை (பி.1929)



மகிந்த ராசபக்ச , இலங்கையின் 6வது அரசுத்தலைவர் (பி.1945)



நயன்தாரா , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1984)



## இன்றைய நினைவு நாள்

வி. பாஷ்யம் ஐய்யங்கார் , இந்திய வழக்கறிஞர், நீதியாளர் (பி.1844) (இ.1908)



வ. உ. சிதம்பரம்பிள்ளை , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1872) (இ.1936)



தி. ஜானகிராமன் , தமிழக எழுத்தாளர் (பி.1921) (இ.1982)

